செய்தி வெளியீடு **நாள் : 26.10.2024**

சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் சிறப்பு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்ட போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

****

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களது உத்தரவின் பேரில் இன்று (26.10.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் சிறப்பு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்ட போது **சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிர்மாணிக்கப்பட்ட கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தின் பராமரிப்பு பணிகளை அங்காடி நிர்வாகக் குழு நிர்வகித்து வரும் நிலையில் அத்தகைய பராமரிப்பு பணிகள் யாவும் ஒப்பந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் கடந்த 15.10.2024 அன்று பெய்த மழையினை தொடர்ந்து மழைநீர் ஆங்காங்கே தேங்கியதையடுத்தும் ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை காலங்களை உள்ளிட்டும் வளாக முழுமைக்குமான துப்புரவு பணியில் தொய்வு ஏற்பட்டது. இதனையடுத்து இன்று (26.10.2024) கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் சிறப்பு துப்புரவு பணி (Special Mass Cleaning) மேற்கொள்ளப்பட்ட போது சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் மலர் அங்காடியில் ஆய்வு செய்து உரிய அறிவுரைகளை வழங்கினார்.

இப்பணியின் போது ஒரே சமயத்தில் காலை 7.00 மணி முதல் **200 எண்ணிக்கையிலான நபர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.** மேலும், கூடுதலான இயந்திர தளவாடங்களும் பயன்படுத்தி வணிக வளாகத்தில் எவ்விடத்திலும் குப்பைகள் இல்லா வண்ணம் அகற்றப்பட்டது. இத்தகைய தூய்மை பணிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய ஒப்பந்ததாரர் பி.வி.ஜி நிறுவனத்தினரும் தகுந்த ஒத்துழைப்பை நல்கினர்.

Verified RealEstate ™

வளாக தூய்மை பணியின் தொடர்ச்சியாக காய்கறி அங்காடி "எப்" மற்றும் "ஜி" பகுதியில் வியாபாரிகளை ஒன்றினைத்து "வளாக தூய்மை நமது கடமை" என துப்புரவு விழிப்புணர்வு முகாம் முதன்மை நிர்வாக அலுவலர், அங்காடி நிர்வாகக் குழு அவர்களது தலைமையில் நடைபெற்றது. இந்நேர்வில் 100–க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் கடையில் உருவாகும் திடக்கழிவுகளை (குப்பைகள்) அதற்கென ஒரு கலனில் சேர்த்து வைப்பதோடு அப்பகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட துப்புரவுப் பணியாளர்களிடம் சேர்த்தல் நலம் என தெரிவித்து இனிவரும் காலங்களில் அதனை நடைமுறைப்படுத்த முழு ஒத்துழைப்பு கோரப்பட்டது.

இந்த ஆய்வின்போது கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, உதவி பொறியாளர் திருமதி.காமாட்சி, மலர் அங்காடி சங்க நிர்வாகிகள் மற்றும் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி பணியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™